2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) மருத்துவப் பட்டப் படிப்பிற்கான கலந்தாய்வுக்குப்பின் வேளாண்மைக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு மற்றும் தர வரிசை நகர்வு முறை (Sliding system) பின்பற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, என்ன சொல்லுங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இப்போது வேளாண்மைக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. இப்போது மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கை* NEET *தேர்வினுடைய அடிப்படையிலே நடைபெறும் என்றிருக்கக்கூடிய நிலையில், +2 தேர்விலே இப்போது 200 மார்க்* cut–off *பெற்றிருக்கக்கூடிய மாணவர்கள்,* B.Sc.(Agri.) *போன்ற படிப்புகளுக்கான கலந்தாய்விலே கலந்துகொண்டு, அரசு வேளாண்மைக் கல்லூரியிலே, முக்கியமாக கோவை, மதுரை போன்ற கல்லூரிகளிலே இட ஒதுக்கீடு பெற்றிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், +2 தேர்விலே இப்போது 198 மார்க்* cut–off *பெற்றிருக்கக்கூடிய மாணவர்கள், தனியார் வேளாண்மைக் கல்லூரிகளிலே அரசாங்க இட ஒதுக்கீட்டின்படி, தூரமாக இருக்கக்கூடிய கல்லூரிகளிலே சேர்வதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. மருத்துவப் படிப்பிற்கான கலந்தாய்வு பின்னர் வருகிறபோது, ஏற்கெனவே இப்போது 200 மார்க்* cut–off *வாங்கி, இத்தகைய அரசு ஒதுக்கீட்டிலே, அரசு வேளாண்மைக் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய மாணவர்கள், பின்னர் மருத்துவப் படிப்பிற்குச் செல்லக்கூடிய நிலை ஏற்படும்போது, அந்த வேளாண்மைக் கல்லூரிகளில்* vacancy *வருகிறது. அந்த நிலையில், இரண்டாம் கட்டக் கலந்தாய்வு அதற்காக நடத்தப்பட வேண்டும். அப்படி இரண்டாம் கட்டக் கலந்தாய்வு நடக்கின்றபோது, ஏற்கெனவே முதல் கலந்தாய்வின் மூலமாக, அரசு இட ஒதுக்கீட்டின்மூலமாக தனியார் கல்லூரிகளிலே இடம் கிடைத்திருக்கக்கூடிய மாணவர்கள் கலந்துகொள்ள முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது.*

இதன்காரணமாக என்ன சூழ்நிலை உருவாகிறதென்று சொன்னால், இரண்டாம் கட்டக் கலந்தாய்வின்போது, தர வரிசையிலே பின்னாலே இருக்கக்கூடிய மாணவர்கள் அரசுக்

கல்லூரிகளிலே இட ஒதுக்கீடு பெறக்கூடிய வகையிலும், அதைப்போல, cut–off அதிகமாகப் பெற்றிருக்கக்கூடிய மாணவர்கள் தனியார் கல்லூரிகளிலேயே அரசாங்க இட ஒதுக்கீட்டின்மூலமாக தொடர்ந்து படிக்கக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. எனவே, நான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, தற்போது நடைபெறக்கூடிய இந்த வேளாண்மைக் கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வினை நிறுத்தி வைத்து, மருத்துவப் படிப்பிற்கான கலந்தாய்வுக்குப்பிறகு, அதனை நீங்கள் நடத்திட முன்வர வேண்டும். ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பொறியியல் படிப்பிற்கான கலந்தாய்வுகள் அனைத்தையுமே மருத்துவக் கலந்தாய்வுக்குப் பிறகு நடத்தலாம் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, அதைப் பின்பற்றி நீங்களும் வேளாண்மைப் படிப்புகளுக்கான கலந்தாய்வினை நிறுத்தி வைக்க வேண்டும் அல்லது மருத்துவச் சேர்க்கையிலே பின்பற்றக்கூடிய அந்த sliding system என்கின்ற முறையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கம் தென்னரசு, நான் உங்களை தகவல் கோரல் என்ற முறையில்தான் அனுமதித்திருக்கிறேன். நீங்கள் விளக்கமாக எல்லாம் பேசக் கூடாது. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. தங்கம் தென்னரசு: கடைசியாக ஒரு பாயிண்ட். ஏற்கெனவே முதல் கலந்தாய்வின் மூலமாக தனியார் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின்மூலம் சேர்ந்திருக்கக்கூடிய மாணவர்களுக்கு, இரண்டாம் கட்டக் கலந்தாய்வில் முன்னுரிமை அளித்து, அதன்பிறகு தர வரிசையின்படி இருக்கக்கூடிய மாணவர்களுக்கு நீங்கள் வாய்ப்பு வழங்கினால்தான், அதிகமான cut–off வாங்கியிருக்கக்கூடிய மாணவர்கள் அரசாங்கக் கல்லூரிகளிலும், தர வரிசையிலே பின்னால் இருக்கக்கூடிய மாணவர்கள், வேறு பல கல்லூரிகளிலும் சேரக்கூடிய நிலை உருவாகும். இதுதான் இயற்கை நியதிக்குப் பொருத்தமாக இருக்கும்; மாணவர்கள் பெற்றிருக்கக்கூடிய மதிப்பெண்களுக்கு மரியாதை கிடைக்கக்கூடிய வகையில், நியாயமாகவும் அமையும். எனவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாணவர்களுடைய நலனைக் கருதி இதனை ஆவன செய்வார்களா என்பதை நான் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2017 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12–05

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் கல்லூரிக் கல்வியில் மாணவர்கள் சேர்க்கை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் முதல் கோரிக்கை முற்றிலும் நியாயமான ஒன்றாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ், 14 உறுப்புக் கல்லூரிகள், 21 சார்புக் கல்லூரிகளில் இளம் அறிவியல் பட்டப் படிப்புகளான, வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், பட்டுப்புழுவியல், உணவு ஊட்டச் சத்தியல் மற்றும் உணவு முறையியல் மற்றும் இளம் தொழில்நுட்ப பட்டப் படிப்புகளான, வேளாண்மைப் பொறியியல், தோட்டக்கலை, உயிரி தொழில்நுட்பவியல், உயிரி தகவலியல், உணவு பதப்படுத்தும் பொறியியல், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல், வேளாண்மை தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக வேளாண்மை போன்ற 13 இளநிலைப் பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. மேலும், உச்ச நீதிமன்ற ஆணைக்கேற்பவும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், மாணவர்கள் சேர்க்கைக்கான இறுதி நாள் ஆகஸ்டு 31 ஆம் தேதியாகும். இந்த 13 இளம் அறிவியல் பிரிவுகளும், தேசிய அளவில் தொழிற்கல்வி பாடப் பிரிவுகளாக அறிவிக்கப்பட்டுள்ளதால், ஒற்றைச் சாளர முறையில் தக்க முன்னறிவிப்புடன், பொதுப் பார்வையில் வைக்கப்பட்டு, கலந்தாலோசனைக்குப்பின், ஒவ்வோராண்டும் ஆகஸ்ட் மாதத்திற்குள் மாணவர் சேர்க்கையினை நிறைவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.*

எனவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கலந்தாய்வு ஜூன் மாதம் தொடங்கி, ஜூலை மாதம் வரை தொடரும் நடைமுறை இவ்வாண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டு மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு துவங்கும் நாள் தொடர்பாக, முடிவு எடுக்க முடியாத சூழ்நிலையில், பொறியியல் கலந்தாய்வு தொடர்பாக உயர் கல்வித் துறையிடம் கலந்தாலோசித்தபிறகும், வேளாண்மைப் படிப்பில் ஓராண்டில் இரு பருவத்திலும், மொத்தம் 210

நாட்கள் வகுப்பு நடைபெற வேண்டும் என்ற கல்வி விதியின் அடிப்படையிலும், இந்த ஆண்டின் முதலாவது கலந்தாய்வு ஜூன் மாதம் 19 ஆம் தேதி தொடங்கி, ஜூன் மாதம் 24 ஆம் தேதி வரை நடைபெற்றது. இரண்டாவது கலந்தாய்வு, எதிர்வரும் ஜூலை 12 ஆம் தேதி முதல் ஜூலை 15 ஆம் தேதி வரை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினைப் பரிசீலித்து, மருத்துவக் கலந்தாய்வு குறித்து இறுதி முடிவு எட்டப்படாத நிலையில், எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் தேதி முதல் ஜூலை மாதம் 15 ஆம் தேதி வரை நடத்த திட்டமிட்டிருந்த வேளாண்மைக் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான இரண்டாவது கலந்தாய்வு, மருத்துவ பட்டப் படிப்பிற்கான முதல் கலந்தாய்வுக்குப்பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நடத்துவது குறித்து இறுதி செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். திட்டமிட்டபடி, ஜூன் மாதம் 19 ஆம் தேதி தொடங்கி ஜூன் மாதம் 24 ஆம் தேதி வரை நடைபெற்ற முதல் கலந்தாய்விற்கு 3,572 மாணவர்கள் அழைக்கப்பட்டு, 2,330 மாணவர்கள் கலந்துகொண்டு, அதில் 2,147 மாணவர்கள் தங்களது விருப்பப் பாடத்தைத் தெரிவு செய்துள்ளார்கள். இக்கலந்தாய்வில் மாணவியரே அதிகளவில் வேளாண் சார்ந்த கல்வியைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இரண்டாவது கோரிக்கையைப் பொறுத்தவரையில், மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் தர வரிசை நகர்வு முறை, அதாவது sliding system பின்பற்றப்படுகிறது. மருத்துவக் கல்லூரியில் ஓரிரு பாடப் பிரிவுகள் அதாவது, எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., போன்ற படிப்புகள் மட்டுமே உள்ளதால், ஒரு மருத்துவக் கல்லூரியிலிருந்து மற்றொரு மருத்துவக் கல்லூரிக்கு மாறுதல் பெற தர வரிசை நகர்வு முறை, அதாவது sliding system முறை சாத்தியமாகிறது. ஆனால், பொறியியல் பிரிவு மற்றும் வேளாண் பிரிவுகளில் பல்வேறு பாடப் பிரிவுகளும், அதிக எண்ணிக்கையிலான கல்லூரிகளும் இருப்பதால், தர வரிசை நகர்வு முறை, அதாவது sliding system முறையைச் செயல்படுத்த இயலவில்லை. அத்துடன், அப்பாடப் பிரிவுகளுக்கான கல்வித் தகுதிகளும் மாறுபடுவதால், தர வரிசை நகர்வு முறையைச் செயல்படுத்துவது சாத்தியமில்லை. எனவே, இவ்வாண்டு தர வரிசை நகர்வு முறையை நடைமுறையில்

2017 ஜூன் 29] [*திரு. இரா. துரைக்கண்ணு*]

பின்பற்ற இயலாது. மேலும், இந்தியாவிலுள்ள 61 வேளாண் பல்கலைக்கழகங்களிலும் இம்முறை செயல்பாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளைக் கருத்திற்கொண்டு, இனிவரும் ஆண்டுகளில் தர வரிசை நகர்வு முறை, அதாவது sliding system *முறையினை நடைமுறைப்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. கவன ஈர்ப்பு

திருவையாறு, தமிழ்நாடு இசைக் கல்லூரியில் மாணவர் விடுதி அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக் குறித்து கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள். (குறுக்கீடு) நாளை எடுத்துக்கொள்கிறேன்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு, தமிழ்நாடு இசைக் கல்லூரியில் மாணவர் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பு தொடர்பாக, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*